பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 04 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு 3ஆம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

2. மகளிர் மற்றும் இளைஞர்களின் நலனில் பிஜேபி அக்கறை கொண்டுள்ளதாக அக்கட்சித் தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தின் அணைகளில் உள்ள நீரை சிக்கனமாக பயன்படுத்தி மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் அடுத்த 5 தினங்களுக்கு வெயிலின் தாக்கம் 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவைக்கு 3ஆம் கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த 94 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது

இதில் மொத்தம் ஆயிரத்து 351 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவர்களின் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி,

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஸ்திரமான நடவடிக்கைகளை தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்டு வந்ததாகக் கூறினார்.

மகளிர் மற்றும் இளைஞர்களின் நலனுக்கு பிஜேபி தலைமையிலான அரசு உயர் முன்னுரிமை அளித்து வந்ததாகவும் அவர் கூறினார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள கோலாப்பூர் உள்ளிட்ட 7 மக்களவைத் தொகுதிகளுக்கு இந்த வாக்குப்பதிவு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கோவாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்பதற்கு உதாரணமாக கோவா மாநிலம் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தால் வரும் ஆண்டுகளில் 3 கோடி வீடுகள் கட்டப்படும் என்றும், அனைத்து வீடுகளுக்கும் குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மீனவர்களின் நலன்களை காங்கிரஸ் புறக்கணித்ததாகவும், ஆனால் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மீனவர்கள் நலனுக்கென தனி அமைச்சகத்தை ஏற்படுத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கோவாவில் உள்ள 2 மக்களவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதனிடையே மகாராஷ்டிர மாநிலம் லத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி,,,

...தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைமையிலான ஆட்சிக் காலத்தில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் ஆகியவை அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

70 கோடிக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கும் சூழலில், மத்திய அரசுப் பணிகளில் 30 லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சி வெற்றி ஆட்சியமைத்தால் வேளாண் கருவிகளுக்கான ஜி.எஸ்.டி. வரி நீக்கப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

விவசாயிகளுக்கான நலன்களைப் பாதுகாப்பதில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு தோல்வியடைந்துவிட்டதாகவும் திருமதி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் 4ஆம் கட்ட தேர்தலில் வேட்புமனுவை திரும்பப்பெற நாளை கடைசி நாளாகும்.

இதனிடையே 8 மாநிலங்களைச் சேர்ந்த 49 மக்களவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது.

இதில் உத்தரப்பிரதேசத்தில் 14, மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, ஒடிசா மற்றும் பீஹாரில் தலா 5, ஜார்கண்டில் 3 தொகுதிகளிலும், ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதி அடங்கும்.

<<<<>>>>

கோடை காலத்தில் மக்களின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு அதன் வினியோகத்தை எவ்வித தடையுமின்றி வழங்குவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

குடிநீர் விநியோகம் தடையின்றி மேற்கொள்வது தொடர்பாக நேற்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிகளாக உள்ள மேற்கு மாவட்டங்களில் நிலவும் குடிநீர்ப் பற்றாக்குறை குறித்து அதிகாரிகள் முதலமைச்சரிடம் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும் தென்மேற்கு பருவமழை காலத்தில் மழையளவு இயல்பைவிட குறைவாகவே இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை அடுத்து அணைகளில் உள்ள நீரை சிக்கனமாக பயன்படுத்தி அடுத்த 2 மாதங்களுக்கு குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாநிலம் முழுவதும் 22 மாவட்டங்கள், வறட்சியால் குடிநீர் பற்றாக்குறை மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது செயல்பாட்டில் உள்ள கூட்டு குடிநீர் திட்டங்களை கண்காணித்து, அவற்றை பராமரிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுப்பதற்கு அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து, பணியாற்ற வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் இன்று முதல் 5 தினங்களுக்கு வெயிலின் தாக்கம் 2 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை அடுத்த 5 நாட்களுக்கு படிப்படியாக 2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு உயரக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழக வட உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இயல்பைவிட 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும் என்றும், ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசுவதற்கும் வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்தவரை அடுத்த 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 36 முதல் 37 டிகிரி செல்சியஸ் அளவிலும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 முதல் 28 டிகிரி செல்சியஸ் அளவிலும் இருக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள பாதிப்புகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி உச்சநீதிமன்றத்தை நாடியபிறகே தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 276 கோடி ரூபாயை விடுவிப்பதாக மத்திய அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் புயல் மற்றும் வெள்ள பாதிப்புகளுக்கான நிவாரணமாக தேசிய பேரிடர் நிவாரண நிதியை விடுவிப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளதாக கூறியுள்ளார்.

புயல் மற்றும் வெள்ள நிவாரண நிதியாக 37 ஆயிரத்து 907 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாநில அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்ததை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் நிலவி வரும் கடும் வெப்பநிலை காரணமாக காட்டுத்தீ ஏற்படாமல் தடுக்க மலைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

கம்போடியாவில் உள்ள ராணுவ தளத்தில் உள்ள ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் அந்நாட்டைச் சேர்ந்த 20 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

-----------

மணிப்பூரில் மத்திய ஆயுதக் காவல்படை மற்றும் மாநில காவல்துறை இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் பிஷ்னுபூர் மாவட்டத்தை ஒட்டிய மலைப்பகுதிகளில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

-----------

யுக்ரைன் உடனான போரில் பயன்படுத்தப்படும் எரிபொருள் வினியோகத்தை சீனா நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

-----------

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வருகையை ஒட்டி கொடைக்கானலில் ட்ரோன் கேமரா மற்றும் பலூன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

-----------

நீலகிரியில் உள்ள முதுமலைப் புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகளின் குடிநீர் தேவையைப் போக்க வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

-----------

*__விளையாட்டுச் செய்திகள்__*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற போட்டியில் முதலில் ஆடிய லக்னோ அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ராஜஸ்தான் அணி, 18 புள்ளி 5 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்தது.

அந்த அணியின் சஞ்சு சாம்சன் 71 ரன்னும், துருவ் ஜூரல் 52 ரன்னும் எடுத்தனர்.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் சென்னை அணி, ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறும் இப்போட்டி, இன்றிரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

---------------

மலேசியாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் 100 மீட்டர் பேக் ஸ்ட்ரோக் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நடராஜ், தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

------------

சீனாவின் செங்டுவில் நடைபெறும் ஊபர் கோப்பை பேட்மிட்டன் போட்டியில் இந்தியா இன்று சிங்கப்பூரை எதிர்கொள்கிறது.

<<<<>>>>